Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# சங்க இலக்கியங்களில் நுண்கலைகள் பற்றி ஓர் ஆய்வு

**முனைவர் G. சந்திரசேகரன்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை தலைவர், தேவாங்கர் கலைக்கல்லூரி, அருப்புக்கோட்டை.

**முன்னுரை:**

சங்கம் வளர்த்த தமிழகத்தில் அரிவார்ந்த சமூகமான புலவர்கள் சங்ககாலத்தில் தமிழ் மொழியறிவில் சிறந்து உன்னத நிலையில் இருந்துள்ளனர் என்றே கூற வேண்டும். ஏனென்றால் அக்காலத்திலே இலக்கியங்களில் தமிழர்களின் வாழ்வியல் சார்ந்த காதல், இசை, நாடகம், இலக்கணம், நமது முன்னோர்களின் போர்த்திரம், பொழுது போக்குகள், கலை சார்ந்தவைகள் என பல்வேறுப்பட்ட துறைகளையும் இலக்கியங்களில் எழுதி வைத்துள்ளனர். அத்தகைய துறைகளில் ஒன்றான நுண்கலைகள் பற்றி இந்தக் கட்டுரையில் விரிவாக காண உள்ளோம்.

**நுண்கலைகள்:**

நுண்கலைகள் என்பது ஓவியம், சிற்பம், கட்டடம், இசை, நடனம் போன்றவைகளாகும். இவைகளின் செயல்பாடு மிகவும் நுண்ணிய அனுகுமுறையை கையாளுவதாலோ இவை இப்பெயர் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் வளர்ச்சி நிலையில் உள்ளவைகளில் நுண்கலை வளர்ச்சியும் கண்ட நாடுகளே நாகரிக வளர்ச்சி நாடு என்று அறிஞர் பெருமக்களால் அழைக்கப்படுகிறது. அத்தகைய துறையில் சங்ககாலம் சிறந்த நிலையில் இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் சான்றாக இன்றும் நிலைத்து நின்று எடுத்துரைக்கின்றன. மேலும் சங்க இலக்கியங்களில் நுண்கலைகளைப் பற்றி செய்திகளை ஒவ்வொன்றாக காண்போம்.

**கட்டடக்கலை:**

சங்க காலத்தில் சிவன், முருகன், கொற்றவை, திருமால் போன்ற தெய்வங்களுக்கு கோவில்களும், பத்தினித் தெய்வங்களுக்கும் கோவில்கள் சங்க காலத்தில் இருந்துள்ளன. இந்த கோவில்கள் பெரிய, சிறிய வடிவிலும் செங்கற்களால் கட்டுவித்துள்ளனர். சங்ககாலத்தில் அரசர்களின் அரண்மனைகளும் கோவிலாகவே மக்களால் பார்க்கப்பட்டுள்ளது.

இந்த கோவில்களும், அரண்மனைகளும், அக்கால நுண்கலை வல்லுநர்களால் நாள் பார்த்து திசைகளையும், தெய்வங்களின் வழிபாட்டு திசைகளையும் பார்த்து அமைத்துக் கொடுத்துள்ளனர் என்பதை கீழ்வரும் நெடுநெல்வாடை பாடல் வரிகள் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றன.

**"ஒருதிறம் சாரா அரைநாள் அமயத்து**
**நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்த**
**தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்**
**பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"**

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழரது பொன்மண்டபம்:-

**"அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி**
**சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று**
**மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்**
**பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்**".

பாடல் வரிகள் மூலம் கோவலனின் மகள் மணிமேகலை காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ மன்னரின் அரண்மனையின் தோட்டத்தில் ஒரு பொன்னால் கூரை வேயப்பட்ட பொன்மண்டபம் இருந்துள்ளது என்பதை விளக்கி கூறுகிறது. சிலப்பதிகாரத்தின் நடகற்காதை. மேலும் இந்த மண்டபத்தை மகதநாட்டு மணிவேலைகாரர், அவந்தி நாட்டுக் கொல்லர், யவன நாட்டு தச்சர், தமிழகத்தின் கட்டடக்கலைஞரும் ஒன்றாக சேர்த்து இத்ததைகய சிறப்பு வாய்ந்த மண்டபத்தை உருவாக்கியுள்ளனர். இந்த மண்டபத்தின் தூண்களில் பவளத்தை பதித்து வைத்துள்ளனர். போதிகை கட்டைகளில் பலவகையான மணிகளை பதிக்கப்பட்டு இருந்தன. மண்டபத்தின் கோணங்களில் முத்து மாலைகள் தொங்க விடப்பட்டு இருந்தன. மேற்கூரைகள் பொன்னில்

வேயப்பட்டு இருந்தன என்று மணிமேகலை காதை விவரிக்கின்றது. மேலும் மண்டபத்தின் தரைப்பகுதி சந்தனதால் மொழுகப் பட்டு இருந்தன. இதன்மூலம் சங்க கால கட்டடக்கலை எவ்வாறு இருந்தது என்பதை அறியலாம்.

**ஓவியம்:**

தொல்காப்பிய காலத்தில் நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இக்கல்லில் வீரனது உருவம் செதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக கல்லிலோ, மரத்திலோ ஓா செய்கை செய்யும் முன்பு செதுக்கும் சிற்பத்தை முதலில் வரைவா் பின்னரே சிற்பி செதுக்க முற்படுவா். ஆகவே சிற்பக்கலைஞா் ஓவியா் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

எனவே தொல்க்காப்பியா் காலம் முதலே ஓவியக் கலை உணா்வு தமிழா்களிடையே இருந்தது என்பது தெளிவு. சங்க நூலான அகநானூறு பாடலில் ஓவியம் பற்றிய உவமைச் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது பின்வருமாறு,

***"ஓவச் செய்தியின் ஒன்று நினைத்து ஏற்ற"***

மேலும் நடனக்கலைஞா்களும் ஓவியக்கலைடயை கற்றிருந்தனா் என்பதற்கு உதாரணமாக பூம்புகாரின் பூங்கொடியாகிய மாதவி ஓவியக்கலையில் பண்பட்டவள் எனப்தை மணிமேகலை என்னும் நூலின் மூலம் அறியலாம்.

***"நாடக மகளிா்க்கு நன்கனம் வகுத்த***
***ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையம்***
***கற்றுத் துறைபோகிய பொற்கொடி நங்கை''*** - என்ற மணிமேகலை பாடலின் மூலம் ஓவிய நூல் ஒன்று இருந்து தெளிவாகிறது. ஓவியா்களுக்கு ஓவியம் தீட்ட வல்லவா், கண்ணுள் வினைஞா் போன் பெயா்களையும் பெற்றிருந்தனா்.

***"நோக்கினாா் கண்ணிடத்தே தம் தொழிலை***
***நிறுத்துவோா்"*** என்று மதுரைக்காட்சியில் நச்சினாா்க் கினியாா் விளக்கியுள்ளாா். ஓவியவிதானம் என்றழைக்கப்பட்ட மண்டப்தில் மாதவியின் நடன அரங்கோற்றம் நடை பெற்றது இந்த மண்டபத்தின் மேற்கூரையின் ஓவியம் தீட்டப்பட்டிருந்ததாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளாா்.

மேலும் நெடுநெல்வாடை என்ற நூலில் தலைடடயாலங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் தலைவி தன் தலைவனை பிரிந்து வாடும் போது அவா் அமா்ந்திருந்த கட்டிடத்தின் மேற்கூரையில் பலவகை ஓவியங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று திங்களின் பக்கத்தில் உரோகினி அமைந்திருப்பது போன்ற ஓவியமாகும். இதனைப் போன்று நானும் என் தலைவனைப் பிரியாமல் இருக்க முடியாதோ? பெருமூச்சு விட்டாள் என்ற செய்தியை நமக்கு காட்டுகிறது.

***"வித்தகா் இயற்றிய விளங்கிய கைவினைச்***
***சித்திரச் செய்கைப் படாம்போா்த் ததுவே***
***ஒப்பத் தோன்றிய உவவனம்''*** - என்ற மணிமேகலை பாடல் வரிமூலம் ஓவியங்களை அமைத்து ஆடை நெய்வதும் ஒரு வகையான கலையும் அக்காலத்தில் இருந்தது உறுதியாகிறது

***கட்டடங்களில் ஓவியம்:***

***"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்***
***மையறு படிவந்து வானவா் முதலா***
***எவ்வகை உயிா்களும் உவமம் காட்டி***
***வெண்சுதை விளக்கத்து வித்தகா் இயற்றிய***
***கண்கவா் ஓவியம் கண்டுநிற் குநரும''*** - என்ற மணிமேகலை பாடலில் தேவா்கள், மக்கள்இ பிறஉயிா்கள்க பற்றிய கண்கவா் ஓவியங்கள் கட்டடங்களின் சுவா்களில் வரையப்பட்டு இருந்தன என்ற செய்தியை நமக்கு காட்டுகிறது.

**திருபரங்குன்றத்தின் மண்டபத்தின் ஓவியம்:**

மதுரையில் உள்ள திருப்பரங்குன்றத்தில் கோவில் மண்டபத்தில் கதிரவன், கண்மதி, கோள்கள், இரதி, மன்மதன், இந்திரன் அகலிகை, கொளதமன், பூனை போன்றவைகளை ஓவியமாக

தீட்டியுள்ளனர் என்ற செய்தியை பரிபாடல் எடுத்துரைக்கிறது. மேலும் நிறங்களை பயன்படுத்தாமல் மேலோட்டமாக வரைப்பட்ட ஓவியங்கள் புனையா ஓவியம் என்ற ஓவிய வகைகளும் வரையப்பட்டுள்ளன.

**சிற்பக்கலை:**

சங்ககாலம் முதலே போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வணங்கும் மரபு இருந்து வந்துள்ளது. வல்லோர் தேர்ந்தெடுத்த கல்லில் வீரனது உருவம் அவனது பெயர், புகழ் போன்றவற்றை சிற்ப வல்லுநர்கள் செதுக்கி வைப்பர், என்று தொல்காப்பியம் என்ற நூல் அக்காலத்தில் சிறந்து இருந்தது என்பதை உணர்த்துகிறது. கோவில்களில் உள்ள சிற்பங்கள், குடைவரைகளில் உள்ள செதுக்கல்களை வைத்து இவ்வுண்மையை உறுதிபடுத்தலாம். மேலும் சேரன் செங்குட்டுவன் இமயமலையில் இருந்து கல் கொண்டுவந்து கண்ணகிக்கு உருவம் செய்தான் என்ற செய்தியையும் சிலப்பதிகாரம் மூலம் அறியலாம். இவைகள் மூலம் சங்ககாலத்தில் நுண்கலைகளில் சிற்பக்களையும் சிறந்து விழங்கியதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

**இசைக்கலை:**

இயலோடும் இசையோடும் நாடகத்தோடும் சங்ககால மக்கள் சிறப்புற்று வாழ்ந்தனர். இவற்றில் இயல்தமிழில் வல்லவர்கள் புலவர்கள் என்றும் இசைத்தமிழில் வல்லவர்கள் பாணர்கள் பாடினியர் என்றும் நாடகத் தமிழில் வல்லவர்கள் கூத்தர், கூத்தியர் என்றும் அழைக்கப்படுவர். பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்ற இரண்டு நூல்களாலும் இசைக்கலை பற்றி நாம் அறியலாம்.

இசையில் ஆசிரியன், குழல் ஆசிரியன், யாழ் ஆசிரியன், மத்தள ஆசிரியன் போன்றவர்கள் இசைக்கலை அறிந்தவர்களாகவும் அதற்கு ஆசிரியர்களாகவும் இருந்தனர் என்பதை சிலப்பதிகாரம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

ஐவகை நிலங்களிலும் தனித்தனியே யாழ் முதலான இசைக் கருவிகளும பண்களும இருந்துள்ளன. இதனை குறமகள் தினைப் புனத்தில் குறிஞ்சிப்பன் பாடினாள், தினை உண்ண வந்த யானை அதனைக் கேட்டு மெய்மறந்து உறங்கிவிட்டது என்று சங்ககால பெண்ணின் இசைக்கலை அறிவாற்றலை நமக்கு மேற்கூறிய அகநானூற்று பாடல் உணர்த்துகிறது. இப்போதுள்ள தமிழ் நூல்களில் பழமை வாய்ந்த நூல் பரிபாடல் ஆகும்.

**நடனக்கலை:**

நாடகத்தமிழில் வல்லவர்களை கூத்தர், கூத்தியர் என்பர். தொல்காப்பியம் என்ற நூலில் கூத்து வகைகளில் ஒன்றான வள்ளிக் கூத்து பற்றி கூறப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலப் பெண்கள் தங்களின் குலக் கடவுளான முருகனை வழிப்பட்டு ஆடிய கூத்து குன்றக்குரவை என்ற கூத்தினை ஆடினர். அதே போன்று முல்லை நில மக்களின் கடவுள் மாயோன் வழிபாட்டில் ஆய்ச்சியர் குரவை கூத்தை ஆடினர். இந்த குரவை கூத்தினை ஏழு, எட்டு அல்லது ஒன்பது நபர்கள் கை கோர்த்து ஆடக் கூடியதாகும்.

**கொடுகட்டி கூத்துக்கலை:**

சங்ககால கூத்துக்களில் கொடுகட்டி கூத்துக்கலையும் ஒன்றாகும். இந்த கூத்தினை சாக்கையன் என்பவன் ஆடினான் என்ற செய்தியை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. சேரன் செங்குட்டுவன் வடநாடு வெற்றியை கொண்டாட அவனது அரண்மனை நிலா முற்றத்தில் கொட்டிச்சேதம் என்னும் கொடு கொட்டிக்கூத்தை சாக்கையன் ஆடினான். மேலும் சிவபெருமான் முப்புரம் எரிந்த போது தன் உடலை ஆண் பெண் ஒரு சேர உள்ள உருவத்தில் அம்மை அப்பராக ஆடிய கூத்தே கொடுகொட்டு கூத்தாகும். இக்கொடு கொட்டி கூத்தைப் பற்றி கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

**விறலிக்கூத்து**

உள்ளக்குறிப்பு வெளிபடுமாறு ஆடக்கூடிய நடனமகள் விறலி எனப் பெயர் பெற்றாள். விறலியருடைய ஆடலையும் பாடலையும் பாராட்டி அரசர்கள் பொன் மாலை, பொற்றொடி, பொன்தாமரை முதலிய அணிகலன்களை பரிசாக வழங்குவதுண்டு. இவர்களுக்கு நாடாளும் அரசன்

விறலியின் திறமைகண்டு பட்டம் வழங்குவதும் மரபாகும். உதாரணமாக மாதவிக்கு சோழமன்னன் தலைக்கோல் என்னும் பட்டத்தை வழங்கினான். இந்த செய்தியை சிலப்பதிகாரம் நமக்கு உணர்த்துகிறது. இந்நடனம் ஆடம்போது பண்பட்ட ஆசிரியர்களும் அரங்கில் கண்ணுருவர். கூத்தி ஆடும் பொழுது ஆசிரியர்கள் பலரும் தத்தம தொழில் செய்வர், மாதவி நடனம் ஆடிய பொழுத

***"குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்***

***தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்***

***பின்வழி நின்றது முழவே"*** - என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுவது கவனிகத்தக்கது. மேலும் சோழமன்னன் நலங்கிள்ளி விறலியருக்கு மாட மதுரையையும் ஈவான் என்ற கோவூர்கிழாரின் கூற்றிலிருந்து தமிழகத்து விறலியர் சங்ககால மன்னர்களிடம் பெற்றிருந்த நன்மதிப்பை அறியலாம்.

**முடிவுரை:**

மலைபடுகடாம் என்ற நூல் பல்வகை இசைக்கருவிகளினை இசைக் கருவிகளை இசை வல்லோர்கள் வைத்திருந்தனர் என்று கூறுவதிலிருந்து சங்ககாலம் முதலாகவே நுண்கலைகள் சிறந்து விழங்கிவந்துள்ளது தெளிவாகிறது. மேலும் சங்க காலத்தில் தமிழ்மக்கள் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை போன்ற நுண்கலைகள் சிறந்து விளங்கியுள்ளது தெளிவாகிறது.

**நூல்பட்டியல்:**

1. லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், சங்க கால தமிழர் வாழ்வு, சென்னை பல்கலைக்கழகம், சென்னை,1964, பக்.101-102
2. சிலப்பதிகாரம், நடுகற்காதை, வரி 222-225
3. நெடுநல்வாடை, வரி 75-78
4. மணிமேகலை, காதை 19, வரி 107-115
5. அகநானூறு, பாடல் 5
6. மதுரைக்காஞ்சி, வரி 518
7. சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை, வரி 106,107,111
8. பரிபாடல்19 வரி 46-53
9. புறநானூறு பாடல், 32
10. மலைபடுகடாம் வரி 3-13.